6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உஉ) தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ் நாடு நீத்தறவு) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறோம். ஏற்கெனவே இந்த தொழு நோய் சம்பந்தமாக இருந்த எண்ணங்களை மாற்றக் கூடிய முறையில் புதிய நவீன மருந்துகளும், நவீன ஏற்பாடுகளும் வந்ததற்குப் பிறகு இப்போது இந்த நோய் பற்றியுள்ள அந்தத் தன்மையே மாறியிருக்கிறது என்று இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக் கிறது. இந்த நோயை மாற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கை களை அரசு இந்தச் சட்டத்தின் படி எடுக்க விரும்புகிறது, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப்பற்றி ஒரு சில விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தால் அது பயனளிக்கக்கூடிய முறையில் அமையும்.

இந்த நோயைப் பற்றி மக்களிடம் ஏற்கெனவே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் இதற்கு என் னென்ன முறையில் வைத்திய வசதிகள் கிடைக்குமென்றும், அந்த வசதிகளை எங்கெங்கே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு விரிவான பிரச்சாரத்தை செய்ய வேண்டும். சில நோய்களைப் பொறுத்த வரையில் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மென்டில் சினிமாக்கள் போடப்படுகின்றன.

இந்த நோய் சம்பந்தமாகவும் அப்படிப்பட்ட பிரச்சாரங்களை ஏற்படுத்தி, மக்களிடையே இந்த நோயை வைத்தியம் செய்து மாற்றமுடியுமென்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்கும், அந்த முறையில் வைத்தியத்தை நாடுவதற்கும், வைத்திய வசதிகள் கிடைக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

---

*1987 ஆம் வருடம் மே மாதம் 5-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[இரவு 7-30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழு நோய் ஒரு காலத்திலே பயங்கரமாக இருந்தது. சிகிச்சையே இல்லை என்று அச்சப்பட்டுக் கொண்டு இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் மருத்துவம் வளர்ந்திருக்கிற இந்தக் காலத்தில், அது தீர்க்கக்கூடிய வியாதி, குணப்படுத்தக்கூடிய வியாதி என்றெல்லாம் ஆராய்ச்சி மூலம் தெளிவுப்படுத்தப்பட்டு, குணப்படுத்தப்பட்டதற்குப் பிறகுதான் இந்தச் சட்டத்தை நாம் நீக்குகிறோம், சட்டத்திலிருந்து எடுத்து விடுகிறோம். இந்தச் சட்டம் முன்பு நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசாங்கச் சட்டமாக இருந்தாலும் இது மாநில அரசின் பட்டியலிலே வருவதால், நாம் தான் இந்தச் சட்டத்தை விலக்க வேண்டும். விலக்கியிருக்கிறோம்.

இந்த நோயைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு, தர்மபுரி, மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் பரவலாக இருக்கிறது என்பது புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. இந்த நோயைத் தீர்ப்பதற்காக, தென் ஆர்க்காட்டிலேயும் சேலம் மாவட்டத்திலேயும் ஏற்கெனவே இருந்து வருகிற டானிடா திட்டத்தின் கீழ் இதற்கு தனியாக மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

இதை விட அடிப்படையாக இருப்பது இன்னொன்று. மாணவப் பருவத்திலேயே இந்தப் பிள்ளைகளுக்கு இந்த நோயின் அறிகுறி இருக்கிறதா என்று பரிசோதிப்பதற்காக, கடந்த ஆண்டு 64 லட்சம் பள்ளி மாணவர்களைப் பரிசோதனை செய்தார்கள். அதிலே 14 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த நோயின் அறிகுறி இருப்பதாகத் தெரிந்திருக்கிறது. முறையாக அவர்களுக்கு வைத்தியம் செய்வதற்காக அடையாள அட்டைகள் கொடுத்து, வைத்தியம் செய்து கொண்டு வருகிறோம். இந்தப் பரிசோதனை தொடர்ந்து நடக்கும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

இதைப்பற்றி ஓர் ஆராய்ச்சி மாநாடு, ஆராய்ச்சிக் கூடம் செங்கற்பட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற திருமணியிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குச் சென்று நானும் கலந்து கொண்டேன். ஆராய்ச்சியாளர்கள் சொல்கிற முடிவு, கி.பி. 2000-மாவது ஆண்டு வரும்போது, தமிழ்நாட்டில் ஒரு தொழு நோயாளி கூட இருக்கக்கூடாது, இருக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அதற்காக மருந்துகள் இலவசமாகத் தரப்பட்டு இருக்கின்றன. தருகிறோம். இந்த நோயின் அடையாளத்தைக் கண்டுபிடிப்பதற்காக கிராமங்கள் தோறும் அங்கேயிருக்கிற பாரா-மெடிக்கல் ஆபிசர்ஸ், அங்கேயிருக்கிற சப்பார்ட்டினேட் ஊழியர்கள், சென்று கண்காணித்து வருகிறார்கள். தேவைப்பட்டால், மருத்துவ, டாக்டர்கள் சென்று பார்த்து வருகிறார்கள்.

the Multi drug theraphy is latest method of treatment and is very effective என்ற குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இது விரைவிலேயே குணப்படுத்தக் கூடிய வியாதி, இதைக் குணப் படுத்தலாம். மடங்கிவிட்ட விரல்களை நிமிர்த்த முடியும். குறைந்து விட்ட விரல்களைச் சரி செய்து, அதை விரலாக, சரி யாக ஆக்க முடியும். முகம் எல்லாம் பழுத்துப் போய் இருந் தாலும் கூட, சாதாரணமாக ஆக்குவதற்கு இப்போது வைத்திய வசதிகள் எல்லாம் இருக்கின்றன என்ற தைரியத்தில்தான் இந்தச் சட்டத்தை நாம் திரும்பப் பெறுகிறோம். இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதினுடைய அடிப்படை நோக்கமே, இந்த வியா திக்கு உட்பட்டவர்களுக்கு தைரியம் கொடுக்கவும், வைத்தியம் செய்து கொள்ளவும், இதை ஒரு தொத்து வியாதி என்று சொல்லி மக்கள் தூரத்திலேயே அவர்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளத் தேவையில்லை, சமுதாயத்தில் அவர்களை தள்ளி வைக்க வேண் டிய அவசியமில்லை என்று சொல்லி, அவர்களுக்கு எல்லாம் வைத்திய வசதி செய்வதற்கும் இந்தச் சட்டத்தை எடுக்கி றோமோ தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வாபஸ் வாங்குகிற இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1987 ஆம் ஆண்டு தொழு நோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஊஊ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 21/1987)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. வை. பாலச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு தவறைச் சுட்டிக்காட்டுவதற்காக மட்டும் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவினுடைய ஆங்கில நகலும், அதனுடைய தமிழ் நகலும் தரப்பட்டு இருக்கின்றன. அதிலே, ஆங்கிலத்திலே சொல்லப்பட்டு இருப்பதற்கும், தமிழிலே சொல்லப்பட்டு இருப்ப தற்கும் மொழி பெயர்ப்பிலே ஒட்டு மொத்தமான, அடிப்படை யான வேறுபாடு இருக்கிறது. 162ஏ செக்ஷன் இன் இங்கிலீஷ். 162-A "Planting and preservation of avenue trees-- The Municipal Council shall, at the cost of the municipal fund cause trees to bc planted at all convenient places on the sides of all public streets.... என்று இருக்கிறது. அதாவது தெருக்களினுடைய இருமருங்கிலும் வசதியான இடமாகப் பார்த்து மரங்களை நடவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் தமிழிலே சொல்லப்படுகின்றபோது ஒட்டு மொத்தமாக அந்தப் பொருளே மாறி விடுகிறது. அதிலே சொல்லப்பட்டிருப்பது, மரம் சம்பந்தமானவை நகராட்சி நிதி செலவிலே, எல்லா பொது சாலைகளின் பக்கங்களிலும், எல்லா வசதியான இடங்களிலும் மரங்களை நடப்படசெய்யவேண்டு மென்று இருக்கிறது. ஆக, எல்லா வசதியான இடங்களிலும், பிளஸ் இந்த சாலைகளினுடைய இருமருங்கிலும் என்று இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்திலே இருப்பதுதான் will be the official version after it is duty passed. என்று இருந்தாலும்கூட What was the intention of the Legislature. என்ற ஒரு கேள்வி நீதிமன்றத்திலே நாளைக்கு வரும் என்றால் அன்றைக்கு intention of legislature--ஐ நாம் சுட்டிக்காட்டுவதற்காக

**1987-ஆம் வருடம் மே மாதம் 7 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.